

இராமநாதபுரம் மாவட்டக் கழக செயல் வீரர்கள் கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் – அமைச்சர் இ.பெரியசாமி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் அமைச்சர் இராஜகண்ணப்பன், மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழக முன்னணியினர் உள்ளனர்.

## டெல்லிக்கு ஆரஞ்சு எச்சரிக்கை!

புதுடெல்லி, ஜூலை 27 -

வடமாநிலங்களில் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக பருவமழை தீவிரமாக பெய்து வருகிறது. தலைநகர் டெல்லியில் நேற்று இரவு முதல் தொடங்கிய மழை நேற்று காலை வரை விடிய விடிய பெய்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் டெல்லியில் தொடர்ந்து மழை பெய்யும் என்று ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனால் யமுனை நதியில் மீண்டும் வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்பட்டு இருக்கிறது. டெல்லியில் மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ பல இடங்களில் நிவாரண முகாம் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

### விருதுநகர் மாவட்டம் வெடிபொருள் தொழிற்சாலை விபத்தில்

# உயிரிழந்தவர்கள் குடும்பங்களுக்கு நிதி உதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 27-

விருதுநகர் மாவட்டம் வெடிபொருள் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிக்கை வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், தாயில்பட்டி கிராமத்தில் இயங்கி வரும் தனியாருக்குச் சொந்தமான வெடிபொருள் தொழிற்சாலையில் 25.7.2023 அன்று பிற்பகல் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட தீவிபத்தில் விஸ்வநத்தம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி.முருகேஸ்வரி, க/பெ.ராமச்சந்திரன் (வயது 39) மற்றும் மண்குண்டாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திருமதி. பானு, க/பெ.சண்முகம் (வயது 39) ஆகிய இருவரும் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்களின் அறிவிப்பு பற்றி அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### இராமநாதபுரம் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம்!

# தி.மு.க. ஆட்சியின் திட்டங்களை பொதுமக்களிடம் தெரிவிக்க வேண்டும்!

### அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு !

இராமநாதபுரம், ஜூலை 23 -

கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசின் திட்டங்களை பொதுமக்களிடம் தெரிவிக்க கழக நிர்வாகம் செயல்பட வேண்டும் என இராமநாதபுரம் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் இ.பெரியசாமி கேட்டுக்கொண்டார்.



இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் பட்டணம் காத்தான் பகுதியில் தனியார் மகாலில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மாவட்ட அவைத்தலைவர் வ.சத்தியமூர்த்தி தலைமை வகித்தார். மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., முன்னிலை வகித்தார். முன்னாள் அமைச்சர்கள் சுப.தங்கவேலன்,சுந்தரராஜன், பரமக்குடி சட்டப்பேரவை உறுப்பினர் செ.முருகேசன்,மாநில மகளிரணி துணைச்செயலாளர் எம்.எஸ்.கே.பவானிராமேந்திரன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உ.திசைவீரன்,மாநில தீர்மானக்குழு செயலாளர் அக்ரி கே.பி.டி.கணேசன், தீர்மானக்குழு துணைத்தலைவர் சுப.த.திவாகரன், மாநில இலக்கிய அணி துணை அமைப்பாளர் பெருநாழி போஸ், மாநில விவசாய அணி துணைச்செயலாளர்கள் முருகவேல், நல்லசேதுபதி, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் இன்பா ஏ. என்.ரகு, மாநில தகவல் தொழில்நுட்ப மண்டல பொறுப்பாளர் விஜய் கதிரவன்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சம்பத்ராஜா, மாவட்ட துணைச் செயலாளர் கருப்பையா, மண்டபம் ஒன்றிய செயலாளா கே.ஜே.பிரவீன், மாநில மீனவரணி துணைச் செயலாளர் ரவி சந்திர ராமவன்னி, தலைமை செயற்குழு உறுப்பினர் மிசா அகமதுதம்பி,மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் ஆதித்தன்,மாவட்ட துணைச்செயலாளர் சுஜாதா, மற்றும் மாநில, மாவட்ட,நகர் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இதில் கலந்துகொண்டு பேசிய பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு முதல்வர் நிகழ்ச்சிகள் சிறப்பாக செய்திட வேண்டும். வரும் நாடாளு மன்றத் தேர்தலில் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டு வெற்றி பெற வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இதனைதொடர்ந்து, பேசிய அமைச்சர் இ.பெரியசாமி:

மத்தியில் இருக்கும் ஆட்சி அமலாக்கத்துறை வைத்து மிரட்டு வதால் தி.மு.க. அச்சப்பட்டு விடாது. எதிர்த்து வெற்றி பெறும். கடந்த இரண்டு ஆண்டுகால ஆட்சியில் அறிவித்த திட்டங்களையும் செய்தோம். அறிவிக்காத பல திட்டங்கள் செய்யப்பட்டுள்ளது. எதிர்க்கட்சிகள் மகளிர் ஊக்கத்தொகை பற்றி பேசுவதை நிறுத்தும் வகையில் செப்டம்பர் 15 ஆம் தேதி அந்த திட்டத்தை முதல்வர் தொடங்கி வைக்க உள்ளார். இந்த திட்டங்களை பொதுமக்களிடம் கொண்டு போய் சேர்க்கும் பணியை கழக நிர்வாகிகள் செய்திட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இ.பெரியசாமி செய்தியாளர்களிடம் கூறுகையில்:


இராமநாதபுரத்தில் ஆகஸ்ட் 17 ஆம் தேதி இராமநாதபுரம்,சிவகங்கை, தேனி, திண்டுக்கல், விருதுநகர்,நெல்லை,தூத்துக்குடி, கன்னியாகுமரி,மதுரை, தென்காசி, ஆகிய 10 மாவட்டங்களில் உள்ள பாக முகவர்கள் கூட்டம் நடைபெறுகிறது. இதே போன்று மண்டபத்தில் 18 ஆம் தேதி மீனவர் மாநாடு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதல்வர் கலந்துகொள்ள உள்ளனர். இந்த மாநாட்டிற்கு 1.50 லட்சம் பேர் பங்கேற்க உள்ளதாக தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், ஒன்றிய பெருந்தலைவர்கள் கே.டி.பிரபாகரன், புல்லாணி , சுப்புலட்சுமி ஜீவானந்தம்,சண்முகப்பிரியா ராஜேஸ்,தமிழ்செல்வி போஸ், ராதிகாபிரபு,சத்யாகுணசேகரன்,முகமது முக்தார், நகர் மன்ற தலைவர்கள் ஆர்.கே.கார்மேகம், சேதுகருணாநிதி,நாசர்கான்,ஆபிதா,மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் வாசுதேவன், மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர், பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சா. இராமமூர்த்தி

**ஜூலை 27 (2013)**



**இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**ஒருங்கிணைந்த சென்னை மாவட்டத்தில் இருபது ஆண்டுகள் வட்டக் கழகச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தல்களில் கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு அரும்பாடுபட்டவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர்

## ஆடுதுறை மு.உத்திராபதி தாயார் முதலாம் ஆண்டு நினைவு நாள்!

### கழகத்தினர் அஞ்சலி!

தஞ்சாவூர் , ஜூலை 27 -

மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் வழக்கறிஞர் ஆடுதுறை மு.உத்திராபதி, மு.குப்புசாமி, மு. நாகலிங்கம் ஆகியோரின் தாயார் மு.சிங்காரத்தம்மாள் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி இன்று (27.07.2023 - வியாழக்கிழமை) காலை 10.00 மணியளவில் கும்பகோணம், உள்ளூர், சௌபாக்கியா நகரில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற



உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர்க் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதி நிதிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்த உள்ளனர்.

## ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

### தலைமைக் கழக அறிவிப்பு!


கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் ஒன்றியத்தைச் சேர்ந்த அ.அருண்காந்த், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 25.7.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### சங்கத் தமிழ் வளர்த்த

# கவிமணி தேசிக விநாயகம் 148வது பிறந்த நாள் இன்று!



தமிழறிஞர் " கவிமணி" தேசிக விநாயகம் அவர்கள் 1876 ஆண்டு ஜூலை திங்கள் 27 ஆம் நாள் நாகர்கோயில் அருகிலுள்ள தேரூர் கிராமத் தில் சிவதாணு ஆதி லட்சுமிக்கு பிறந்தார்.

இளம் வயதில் தமிழறிஞர் சாந்தலிங்கம் தம்பிரான் அவர்களிடம் தமிழ் பயின்றதோடு, தமிழ் இலக்கண இலக்கியங்களையும் கற்றுத் தேர்ந்தார்.

"உள்ளத்து உள்ளது கவிதை
இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த
தமிழில் - உண்மை
தெளிந்து உரைப்பது கவிதை" …

என்று கவிதைக்கு இலக்கணம் வகுத்தவர் கவிமணி ஆவார்.

சென்னை பச்சையப்பன் கல்லூரி வளாகத்தில் 29.12.1940 ஆன்று நடைபெற்ற சென்னை மாநில ஏழாம் தமிழ்ச் சங்க மாநாட்டில் தமிழறிஞர் உமாமகேஸ்வரனார் அவர்கள், கவிஞர் தேசிக வினாயகம் அவர்களுக்கு " கவிமணி " என்ற பட்டத்தினை வழங்கி புகழ்ந்துரைத்தார்கள்.

கவிமணி தேசிக விநாயகம் அவர்கள் எழுதிய குழந்தைக் கவிதைகள் புகழ் பெற்றவை. கவிமணி அவர்கள், குழந்தை துயில் எழுவதை பாடும் பாங்கினைப் பாரீர்!

அருணன் உதித்தனன்;
அம்புசம் விண்டது
சூரியன் உதித்ததும்
தாமரை மலர்ந்தது.
…என்று வருணிக்கும் அழகே அழகு.
அதுமட்டுமல்ல..

முல்லை நறு மலரோ !
முருகவிழ்க்கும்
தாமரையோ !
உள்ளம் குளிர
உரையாடும்
பைங்கிளியோ !
தேவாரப் பாட்டும்
திருவாசகத் தேனும்
நாவார உண்ண
பிறந்த நன்மகளோ !
.. என்கிறார் கவிமணியார்.

இறைவன் கோயிலில் இல்லை; உள்ளத்தில்
உள்ளான் என்கிறார்…
" கோயில் முழுதும்
கண்டேன் உயர்
கோபுரம் ஏறிக் கண்டேன்;
தேவாதி தேவனை
யான் தோழி !
எங்கு தேடியும் கண்டிலேன்..
…என்று பாடியவர் கவிமணியாவார்.

" இந்தியாவில் சாதிப்பிரிவுகள்
ஒரு சாபம் என்று
வேதனையுற்று,

" பிறப்பொக்கும் எல்லா
உயிர்க்கும் "
..என்ற அய்யன் திருவள்ளுவரின் உயர்மொழியினை ஏற்று,

மக்கள் உடம்பில் ஓடும்
குருதியிலோ
விழிகளில் வழியும்
கண்ணீரிலோ
தேடிப் பார்த்தாலும் சாதி
ஒன்றும் தெரிவதே இல்லை
அனைவரிடை உடம்பில்
ஓடும் குறுதி சிகப்பு நிறமே !
அனைவரின் கண்ணீரும்
உப்புத் தன்மையே !

இவ்வுலகில் பிறக்கும்போதே
" நெற்றியில் திருநீற்றையும்
மார்பில் பூணூலையும்
அணிந்து கொண்டு
யாரேனும் பிறந்ததுண்டா ?"

என்று உணர்ச்சி ததும்ப கேள்வி கேட்ட கவிமணி அவர்கள், மேற்குலத்தார் யார் என்பதை விளக்குகிறார்… பிறப்பினால் எவருக்கும் பெருமை வராது; சிறப்பு வேண்டுமெனில் நல்ல செய்கை வேண்டும்; நன்மை செய்பவரே உலகமே நாடும் மேற்குலத்தார் ஆவார்!

அகிம்சை விருத்தம், ஆசிய ஜோதி , மலரும் மாலையும், மருமக்கள் வழி மான்மியம், குழந்தைச் செல்வம் உரை, மணிகள் பாரசீகக் கவிஞர் உமர் கய்யாம் அவர்களின் கவிதைகள் போன்றவை கவிமணி அவர்கள் படைத்த சிறந்த நூல்களில் சிலவாகும்.

கவிமணி அவர்கள் பட்டப் படிப்பினை ஆசிரியர் பயிற்சியினையும் முடித்து, தான் பயின்ற தேரூர் பள்ளியில் ஆசிரியராகவும், திருவனந்தபுரம் மகளிர் கல்லூரி பேராசிரியராகவும் திறம்பட பணியாற்றியவர்.

அன்றைய சென்னை மாகாண அரசு, கவிமணி தேசிக விநாயகம் அவர்களுக்கு "அரசவைக் கவிஞர் "பொறுப்பினை வழங்க தேர்வு செய்த போது, அரசவைக் கவிஞர் பொறுப்பிற்கு தகுதியானவர் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் அவர்களே மிகவும் பொருத்தமானவர் என்பதால் அவருக்கே "அரசவைக் கவிஞர் பதவியினை வழங்க வேண்டும்" என்ற பெருந்தகையாளர் கவிமணி ஆவார்.

இந்தியாவில் உள்ள மாநிலங்கள், மொழிவழி மாநிலங்களாகப் பிரிக்கப்பட வேண்டும் என்ற கிளர்ச்சியில் பெரும் பங்கேற்றார்.

1950 ஆண்டு கன்னியாகுமரி எல்லைப் போராட்ட மாநாட்டில் கவிமணி அவர்கள் எழுச்சியுரை ஆற்றியவர்.

தமிழறிஞர் கவிமணி தேசிக விநாயகம் அவர்கள் தனது 79 ஆவது வயதில் 1954 டிசம்பர் 26ல் இயற்கை எய்தினார்கள்.

அவர் வாழ்ந்த தேரூர் இல்லம் பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு நினைவு இல்லமாக ஆக்கப்பட்டது.

கவிமணி தேசிக விநாயகம் அவர்களின் கவிதைகள் அனைத்தையும் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அரசுடைமையாக்கி அவர்தம் மரபுரிமையினர்களுக்கு ரூ.15 இலட்சம் வழங்கி பெருமை சேர்த்தார்கள்.

கவிமணி அவர்களின் அஞ்சல் தலையினை ஒன்றிய அரசு 2005 ஆண்டு வெளியிட்டு பெருமைப் படுத்தியது.

" சந்தத் தமிழ் வளர்ப்போம்;
தாய் நாட்டுக்கு
உழைப்போம்;
சிந்தை மகிழ்ந்து தினம்"

என்று பாடிய " கவிமணி தேசிக விநாயகம் அவர்களின் புகழ் தமிழர்களின் ஊள்ளங்களில் என்றும் நிலைத்து நிற்கும்.

**க.வை. இராமகிருட்டினன்**
செயலர்
அய்யன் திருவள்ளுவர்
இலக்கிய மன்றம்
மதுரை



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பொள்ளாச்சி நகர கழகம் சார்பாக தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் முன்னிலையில் தலைமை நகர மன்ற தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன், நகர செயலாளர் நவநீதகிருஷ்ணன் மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டார்கள். இந்தக் கூட்டத்தில் சேலம் சுஜாதா சிறப்புரையாற்றினார்.